# இலங்கையில் நிகழ்ந்த இந்துசமய மறுமலர்ச்சியில் இந்துசமயப் பத்திரிகைகளின் பங்கு

# The Role of Hindu Religious Print Media in the renaissance of Hinduism in Sri Lanka

முனைவர்.ச. முகுந்தன் / Dr.S. Muhunthan[1]

## Abstract

The renaissance of Hinduism that occurred in Sri Lanka during the 19th century is generally considered to be the renaissance of Saivaism itself. Although this rejuvenation progressed rapidly under the leadership of Arumuga Navalar, the role played by the print media during this period was of great significance. Religiously oriented periodicals registered as newspapers began to emerge with the appearance of the print medium. Such newspapers engaged vehemently in propagating Christian and Hindu based religious concepts in support of the religion they were committed to. The newspapers which supported Hinduism included *Ilangai Nesan, Vijjanavardhani, Saiva Abimani and Inthu Chathanam* (Hindu Organ). They acted mainly against Christian-oriented print media like *Udayatharakai, Viddyatharpanam*, Catholic Guardian and *Ilangabhimani*, whose main concern was the propagation of Christianity. Hindu-based print media, on the other hand, followed the dual conceptual path proposed by Arumuga Navalar, and aimed to achieve the two main goals: "Establishing their own religion" and "Refuting the other religious concepts" (especially Christianity). These newspapers advocated strong policies pertaining to religious education, women's progress, as well as criticisms against religious conversions, religious discipline, and temple management. It would be appropriate to consider that these newspapers acquired great success, particularly in creating an awareness among the educated middle class society who headed the Hindu religious movements in support of such renaissance at that time.

Date of submission: 2021-10-31
Date of acceptance: 2021-11-20
Date of Publication: 2021-12-25
Corresponding author's Name:
Dr.S. Muhunthan
Email: smuhunthan@univ.jfn.ac.lk

**Key Words:** Renaissance, Hinduism, Hindu Print media, Arumuga Navalar, Inthu Chathanam,

### அறிமுகம்

இந்தியாவைப் போன்றே இலங்கையின் இந்துசமய வரலாற்றுப் போக்கிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டானது குறிப்பிடத்தக்க திருப்பு முனைகளைக் கண்ட ஒன்றாகும். சாதாரணமாக எந்தவொரு சமயமும் சுமூகமாக இயங்கிக் கொண்டு இருக்கும் போது ஆழமான ஆன்ம விசாரணைகளோ தீவிரமான மறு மதிப்பீடுகளோ நிகழ்வதில்லை. நெருக்கடிகள் சூழும்போதே அடிப்படைகள் புனராய்வு செய்யப்பட்டுப் புதிய வழிவகைகள் முன்வைக்கப்படுகின்றன. இது பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இலங்கையின் இந்துசமயப் புலத்துக்கும் சாலப் பொருத்தமானது.

[1] The Author is Head and Senior Lecturer, Department of Hindu Civilization, University of Jaffna, Sri Lanka. smuhunthan@univ.jfn.ac.lk

ஆட்சியதிகார வசதிகளுடன் உள்நுழைந்த "கிறிஸ்தவ மயமாக்கம்" பல தளங்களில் இந்துசமயப் புலத்துக்கு சவால்களைக் கொடுத்தது. மதப்பிரச்சாரத்துக்காகவே தம்மை அர்ப்பணித்த கிறிஸ்தவ மிசனரிகளின் சேவை மனப்பாங்கு, ஆங்கிலம் கற்ற நடுத்தர வர்க்கத்தின் எழுச்சி, கைத்தொழில் புரட்சியின் விளைவுகளின் ஒன்றான அச்சுயந்திர வருகையினால் சமூகத்தில் ஏற்பட்ட உலக தரிசனம், மதம் மாறியோருக்குப் பதவி நிலை வாய்ப்புக்களை அளிக்கவல்ல அரசபூட்கைகள் என்பன அவற்றுட் சிலவாகும்.

மேற்படி அம்சங்கள் இந்து மதத்திற்குச் சவாலாக விளங்கிய அதே வேளையில் இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் மறைமுகமாக உதவிய காரணிகளாயும் விளங்கின. எடுத்துக்காட்டாக கிறிஸ்தவமயமாக்கலுக் கெதிரான ஆறுமுகநாவலரின்சுயமத ஸ்தாபன திட்டமிடுகையின் அநேக வியூகங்கள் மிசனரிகளை முன்மாதிரியாகக் கொண்டே தீட்டப்பட்டன. பிரசங்கம் மற்றும் வினாவிடை முறையில் சமயக் கருத்துக்களைப் பரப்புதல் சமயப் புலத்துடன் கூடிய கல்லூரிகளை ஸ்தாபித்தல், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை வெளியிடுதல் போன்றவை இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். அந்த வகையில் எந்தெந்த விடயங்கள் இந்துசமயத்தின் இருப்புக்குச் சவால் விடுத்தனவோ அவற்றை இலாவகமாகத் தனக்குள் உள்வாங்கிக் கொண்ட பாங்கினாலேயே பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்து சமய மறுமலர்ச்சி வெற்றி பெற்றதெனலாம்.

## ஆய்வின் நோக்கம்:

இந்துசமயச் சார்புடைய பத்திரிகைகளான இலங்கை நேசன் (1877), சைவ உதயபானு (1880), சைவசம்போதினி (1881), விஞ் ஞானவர்த்தினி (1882), சைவ அபிமானி (1884) இந்து சாதனம் (1889) ஆகியவை பற்றி அறிமுகம் செய்தலும் அவை இந்துசமய மறுமலர்ச்சிக்கு எவ்வகையில் உந்துசக்தியாக விளங்கின என்பதை மதிப்பிட முனைவதுமே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாக அமைகிறது.

## இந்து சமய மறுமலர்ச்சியை அவாவி நின்ற சமூகப் பின்னணி:

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், தென்னாசியப் பிராந்தியம் முழுவதிலுமே மேலைத்தேசத்தார் ஆட்சியின் பக்கவிளைவுகள் சமூக பொருளாதார அரசியற்றுறைகளில் பிரதி பலித்தன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கன்று. கைத்தொழிற் புரட்சியின் விளைவுகளும் கிறிஸ்தவ மிசனரிகளின் சுறுசுறுப்பான மதமாற்றக் கொள்கைகளும் இக்காலகட்டத்தில் பிரித்தானிய காலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளுக்கும் நீட்சியுற்றன. இலங்கையும் இதன் விளைவுகளை எதிர்நோக்கியது.

அரசகரும மொழியான ஆங்கிலத்தைக் கற்ற சுதேசிகளுக்கு அரசதுறையில் வேலை வாய்ப்பு என்ற இத்திட்டத்தினால் சுதேசிய இந்துக்களும் பெருமளவில் கவரப்பட்டனர். ஆங்கில மூலக்கல்வியைக் கற்க வேண்டுமாயின் மிசனரிகளால் நடாத்தப்படும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியதும் ஞானஸ்நானம் பெற்று விவிலியம் ஓதுவதும் இன்றியமையாதனவாக இருந்தன.

கிறிஸ்தவர்களாக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் வசதிவாய்ப்புக்களும் மட்டுமன்றிச் சாதீயத்தின் பெயரால் விளிம்புநிலை மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்கு முறைகளும் மதமாற்றத்தை ஊக்குவித்தன.

## மறுமலர்ச்சி என்ற எண்ணக்கரு:

ஆங்கிலத்தில் "Renaissance" என்ற பதம் மறுமலர்ச்சி என்ற கருத்தைக் குறித்து நிற்பதாகும். இச்சொல் பிரான்சிய மொழியிலிருந்து ஆங்கிலம் கடன் பெற்ற பதமாகும். இக்கருத்தாக்கம் கி. பி. 14ஆம் நூற்றாண்டில் Francesco Petraca போன்ற சில கலைஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

"Renaissance the French word for Rebirth has generally been taken to signify the revival of the knowledge of Greek and Roman Civilizations" (Engle Wood Cliffs,1976, p.24)

அதாவது மறுபிறப்பு என்ற வகையில் மறைந்து போன கிரேக்க ரோமத் தொல்சீர் பண்பாட்டு வடிவங்களை மீளுருவாக்கம் செய்தல் பற்றிய சிந்தனையே இதுவாகும். காலப்போக்கில் மறுமலர்ச்சி என்ற பதப்பிரயோகம் உலகப்பொது வழக்கில் நுழைந்தபொழுது வெவ்வேறுபட்ட பண்பாட்டுக் குழுவினரும் தத்தமது பண்பாட்டுப் பொற்காலங்களை மீள் உருவாக்க முனைதல் அல்லது இழந்து போன சமூக பண்பாட்டு அடையாளங்களை மீள நிலை நிறுத்த முயல்கின்ற சந்தர்ப்பங்களுக்கெல்லாம் ‘மறுமலர்ச்சி’ என்ற சொற் பிரயோகம் பயன்படுத்தப்பட்டது.

மறுபடியும் மலர்தல் எனும்போது “போலச்செய்தல்” என்ற, பொருட்தொனிப்பு ஏற்படினும் உண்மையில் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப நிகழ்ந்துள்ள மாற்றங்களையும் உள்வாங்கிக்கொண்டே இம்மலர்ச்சி அமையும். அவ்வாறன்றிக் குறித்த

காலத்தின் பண்பாட்டுச் சூழமைவுக்கு மீளத்திரும்புதல் என்பது இதன் அர்த்தமன்று. அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்த ஆங்கிலக் கல்வி, அச்சுவாகனம், பத்திரிகையூடகம், பகுத்தறிவுவாதம், கிறிஸ்தவ மிசனரிகளின் பிரச்சார உத்தி முறைகள், நடுத்தர வர்க்கத்தின் எழுச்சி போன்ற அம்சங்களைப் புறக்கணித்து விட்டு ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலகட்டத்திற்குத் திரும்புதலாக அமையவில்லை. மாறாக முற்கூறிய அம்சங்களின் உதவியுடன் நவீன மயப்படுத்தப்பட்ட இந்துப் பண்பாட்டுப் புலத்தினை உருவாக்கும் விதத்திலேயே அமைவுற்றது என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

வண்ணைப் புனராக்க இயக்கம், நாவலர் குழுமம், வேதாகமோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசியம், சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம், விவேகானந்த சபை போன்ற நிறுவன அமைப்புக்களும், திண்ணைப் பள்ளிக்கூட மரபிலிருந்து முதிர்வுற்ற சைவப்பிரகாச வித்தியாசாலைகளும், இந்துக்கல்லூரிகளும் இத்தகைய கண்ணோட்டத்திலேயே தமது இலக்குகளைத் தேர்ந்தெடுத்தன. அவை பற்றி விரிவாக ஆராய்வது எமது நோக்கமல்ல.

### இலங்கையில் இந்து சமயச் சார்புடைய பத்திரிகைகளின் தோற்றம்:

இலங்கையில் புதினப் பத்திரிகைகளின் சகாப்தம் “கவர்மன்ட் கசற்” அரச வர்த்தமானி (1802) உடன் ஆரம்பமாகிறது. இதன்பின்பு “கொழும்பு ஜர்னல்”, “த ஒப்ஸேவர்” “சிலோன் குறோனிக்கிள்” எனப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின.” *(சிவகுருநாதன்,1993,* p.2)

ஆயினும் அச்சுயந்திரத்தைப் பயன்படுத்திப் பிரசுரங்களை வெளியிடுகின்ற உரிமை கி. பி. 1834 வரை ஆங்கில அரசாங்கத்திற்கே ஏகபோகமாயிருந்தது. எவ்வாறாயினும் மதத்தைப் பரப்புவதற்குப் பத்திரிகையூடகம் வாய்ப்பானது என்பதனை உணர்ந்து கொண்ட கிறிஸ்தவ மிசனரிமார்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் பேரில் கி. பி. 1834ல் பிரசுர உரிமையைப் பெற்றுக் கொண்டனர். இதன் மூலமாக அமெரிக்க மி~னைச் சேர்ந்த “ஜோசப்நைற்” என்ற பாதிரியாரால் சமயப்பிரச்சார நோக்கத்திற்காக நல்லூரில் நிறுவப்பட்டுப் பின் மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்பட்ட அச்சகமொன்றிலிருந்து 01.07.1841ல் “உதயதாரகை” வெளியிடப்பட்டது (Morning Star, 7/01/1841, p.24).

இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை என்ற சிறப்பை உதயதாரகை பெறுகிறது. உதய தாரகையைத் தொடர்ந்து உரைகல் (1845), வித்தியாதர்ப்பணம் (1853), இலங்காபிமானி (1863) ஆகிய கிறிஸ்தவ சமயச் சார்பான பத்திரிகைகள் தோற்றம் பெறுகின்றன. இந்து சமயத்துக்கெதிரான கண்டனங்களையும் சமூக சீர்திருத்த சிந்தனைகளையும் மதமாற்றப் பூட்கையுடன் வெகுசனச் செய்திகளாகக் குழைத்துக் கொடுத்த இத்தகைய கிறிஸ்தவ

சமயச்சார்புடைய பத்திரிகைகள் இந்து சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தை அவதானித்த இந்துசமயப்பற்றுடைய புத்திஜீவிகள் சிலர் இந்துப்பத்திரிகை ஊடகத்தின் அவசியம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்.

ஆறுமுகநாவலர் ஏலவே அச்சு ஊடகத்தின் இன்றியமையாமையை உணர்ந்திருந்தார். ஆயினும் சுதேசிகளுக்கு அச்சியந்திரத்தைப் பயன்படுத்துகின்ற உரிமை பலகாலம் மறுக்கப்பட்டு வந்தது. ஆயினும் எட்டு வருட முயற்சியின் விளைவாக ஆறுமுகநாவலரால் "வித்தியநுபால அச்சியந்திரசாலை" என்ற பெயரில் அச்சுக்கூடமொன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது (1849 ஆடி). இவ்வச்சுக்கூடத்தை ஆறுமுகநாவலர் கண்டனப் பிரசுரங்களையும், நூல்களையும் பிரசுரிக்கவே பயன்படுத்தினார். ஆனால் இந்துசமயச் சார்புடைய பத்திரிகை ஒன்றைப் பிரசுரிக்க வேண்டுமென்ற முனைப்புடன் செயற்பட்டவராக "சாமுக் குருக்கள்" என்பவர் அடையாளங் காணப்படுகின்றார். இவர் ஆறுமுகநாவலருடனும் சங்கர பண்டிதருடனும் நெருங்கிய தோழமை பூண்டவராகத் திகழ்ந்ததுடன் நாவலரின் ஆதர்ச சீடர்களுள் ஒருவர் என்பதுவும் அறியக்கிடக்கின்றது.

சாமுக்குருக்கள் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு கொண்ட இந்துப் பத்திரிகையொன்றை வெளிக்கொணர எடுத்த முயற்சி பற்றி இலங்காபிமானி என்ற கிறிஸ்தவச் சார்புடைய (1863) பத்திரிகையில் அங்கதச் சுவையுடன் செய்திக்குறிப்பு ஒன்று வெளியாகியது.

"சிவதத்துவப் பெருமாள் ஸ்ரீ ஆறுமுகநாவலருடைய மாணவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சாமுக்குருக்கள், இங்குள்ள சைவசமயிகளுக்கும் அவரது குருவை நிகர்சிக்க வாரந்தோறும் சைவப் பிரசங்கம் செய்ய எத்தனிக்கிறார். அத்துடன் பரதேசத்தவர்களுக்கு உபயோகமாயிருக்கும் வண்ணம் சைவப்பொருளை உள்ளுக்குள் வைத்து ஒரு பத்திரிகையோ, புத்தகமோ பிரசாரம் செய்வாரெனவும் ஒரு பக்தியாதியுண்டு சாமுக்குருக்கள் ஒரு பத்திரிகை நடத்துவாராம். ஒருவேளை அவுஸ்திரேலியாவின் குதிரைகள் போல் பத்திரிகையுமாமோ. நாமறியோம்". *(சிவகுருநாதன்,1993,* p.82*)*

ஆயினும் சாமுக்குருக்களின் முயற்சி வெற்றியளித்ததா? என்பது பற்றிய விபரங்களை அறியமுடியாதுள்ளது.

### இலங்கை நேசன் – கி. பி. 1877

இலங்கையில் இந்துசமயச் சார்பான முதலாவது பத்திரிகை "இலங்கை நேசன்" என அறியப்படுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இதன் ஆசிரியராகத் திரு. சின்னத்தம்பி என்பவர் கடமையாற்றினார் *(சிவகுருநாதன்,1993,* p.74*)*.

"உதயதாரகை" பத்திரிகை மூலமாக இந்துமதத்தின் மீது ஏவப்படுகின்ற கண்டனங்களுக்குப் பதிலுரைகள் எழுதுதற்குரிய தளமாக இலங்கை நேசனை ஆறுமுகநாவலர் பயன்படுத்தினார். அத்தகைய கட்டுரைகளுக்குள் கொடுமுடியாகத் திகழ்வது "இது நல்ல சமயம்" என்ற தலைப்பில் ஆறுமுகநாவலரால் இலங்கை நேசனில் எழுதப்பட்ட கட்டுரையாகும். இக்கட்டுரை 1877ஆம் ஆண்டு கார்த்திகை 22இல் வெளியான இலங்கை நேசனில் இடம்பெற்றிருந்தது. எது சமயம்? என்ற வினாவுடன் தொடங்கி? சமூகத்தில் சமயத்திற்கான வகிபங்கு, சமயத்தின் உண்மை இலக்கு, சமயத் திணிப்பினால் ஏற்படுகின்ற "சுயம்" பற்றிய குழப்பம் போன்ற பல தளங்களைத் தொட்டுச் செல்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

இப்பத்திரிகையில் எழுதிய மயில்வாகனப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் போன்ற பெரியார்களும் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளைச் சமூகத்திடம் கொண்டு சென்றனர். இவர்கள் இருவரும் இலங்கை நேசனூடாக வைமன் கதிரவேற்பிள்ளையுடன் நடாத்திய சமயத்தர்க்கங்கள் இந்து வெகுஜன விழிப்புணர்வுக்கு வழிகாட்டின குறிப்பாக "கத்தோலிக்க பாதுகாவலன்" உடன் இலங்கை நேசன் நடாத்திய கருத்து மோதல்களைப்

“புதினக் கடுதாசிகளின் யுத்தம்” என இலங்கைநேசன் ஆசிரியர் பின்னாளில் வர்ணிப்பது கவனிக்கத்தக்கது.

### சைவ உதய பானு – 1880

நாவலர் மரபின் குரலாக வெளிவந்த பத்திரிகையாக “சைவ உதயபானு” அமைகிறது. இது 1880ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி முதல் இது வெளிவரத் தொடங்கியது. அதன் ஆசிரியராக ஊரெழு சரணவமுத்துப்பிள்ளை கடமையாற்றினார். (சிவகுருநாதன், 1993, ஜீ.84). இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சி என்பது முறையான சமயக் கல்வியினூடாக உறுதிசெய்யப்படும் என்ற நம்பிக்கையோடு கட்டுரைகளையும் ஆசிரியர் தலையங்கங்களையும் இப்பத்திரிகை வெளியிட்டு வந்தது.

உத்தியோக வாய்ப்புக்களிற்காகக் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்கும் இந்துச் சிறார்கள் தங்கள் பண்பாட்டு வேர்களை அறுத்துக் கொள்கிறார்கள் என்ற ஆதங்கத்தினால் காட்டமான விமர்சனங்களையும் இப்பத்திரிகை தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது.

“பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலே உங்கள் பிள்ளைகளைக் கற்க விடுவீரேயானால் அவர்கள் பிற்காலத்தில் நீங்களே தங்கள் பிதாக்கள் என்பதும் தோன்றவையாது. தங்கள் பெயர்களையும் மாற்றி ‘யோவான்இ யாக்கோபு’ என்றும் இட்டுக்கொண்டு உங்கள் பேருக்கெல்லாம் தீராப்பெரும் இழிவை நாடுவார்கள்” (சைவஉதயபானு 03, மாசி,1882, ஜீ.03).

“சைவக்குடியிற் பிறந்த பிரபுக்களே எங்கள் அத்திவாரங்கள் ஆடாவண்ணம் ஒரு சிறியபொழுதும் தாழ்த்தக்கூடாது. அரசாட்சியாரிடம் ஒரு பள்ளிக்கூடத்தைப் பெற்று அங்கே உமது பிள்ளைகளை அனுப்புங்கள்” இத்தகைய ஆசிரியர் தலையங்கங்களில் இடம்பெற்றுள்ள மதக்காழ்ப்புணர்வு தோய்ந்த சொற்பிரயோகங்களைக் கருத்திற் கொள்ளாது அச்செய்திக் குறிப்புக்களை ஊன்றிக் கவனித்தால் அன்றைய இந்து சமூகத்தின் யதார்த்தத்தை உணரமுடியும். குறிப்பாக இந்துப் பாடசாலைகளைத் தோற்றுவிக்கவல்ல ஒரு புத்திஜீவிகள் குழுமம் பொருளாதார பலத்துடன் அரசாங்க ஆதரவைப் பேச்சளவிலாவது பெற்றுக் கொண்டு செயல் தொடங்க வேண்டும் என்பதனை மீள மீள வலியுறுத்தச் சைவ உதயபானு தவறவில்லை.

### சைவசம்போதினி (1881)

கருத்து நிலையில் சைவ உதயபானுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெளிவந்த பத்திரிகையாக சைவசம்போதினி திகழ்ந்தது. இப்பத்திரிகையை உடுவில் வைத்தீசுவர ஐயர் என்பவர் கரலிகிதப் பத்திரிகையாக 1881ல் வெளியிட்டார் (வித்தியானந்தன்,1974, ஜீ.349).

பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இரண்டரை வருடங்களுக்குள் இப்பத்திரிகை நின்றுபோனது. சைவ உதயபானுவைப் போன்று குறிப்பிடத்தக்க சமூக விழிப்புணர்வினை இப்பத்திரிகையால் ஏற்படுத்த முடியாமைக்கு இதன் குறுகிய ஆயுட்காலமே காரணமெனலாம்.

### விஞ்ஞான வர்த்தினி (1882)

மூத்ததம்பிச் செட்டியாரால் 1882ம் ஆண்டில் வெளிவரத் தொடங்கிய பத்திரிகை விஞ்ஞானவர்த்தினி ஆகும் (சிவம் கோப்பாய்,1984). பெயருக்கு ஏற்ற வகையில் (Intellectual Preceptor) மேட்டுக் குடிசார் புத்திஜீவிகளைத் தனது வாசகர் வட்டமாகக் கொண்டிருந்தது. விசேடமாக தத்துவார்த்தப் போராட்டங்கள், அளவையியல் போன்ற கருத்தியல்களை இலங்கை சமூகத்துக்கு அறிமுகம் செய்துவைத்த பெருமை இப்பத்திரிகைக்குரியது.

இப்பத்திரிகையே பிற்காலத்தில் விவேகானந்தரின் ஈழ வருகையின் போது உதயதாரகையினால் கிளப்பப்பட்ட சித்தாந்த வேதாந்த முரண்பாடுகள் பற்றிய சர்ச்சைகளிற்குத் தக்க பதில் தருவதற்கு இந்துசாதனத்தின் ஆசிரியபீடத்திற்கு உதவியது. விஞ்ஞானவர்த்தினி விளிம்புநிலை மக்களை நோக்கித் தனது கருத்தியல் நீட்சியைக் கொண்டிருக்காவிடினும் நடுத்தர, மேட்டுக்குடிப் புத்தி ஜீவிகளின் மத்தியில்

குறிப்பிடத்தக்க செல்வாக்கைப் பெற்றிருந்தது எனலாம்.

### சைவ அபிமானி

வல்வை பொ. ஞானசபாபதிப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்ட பத்திரிகையாக சைவ அபிமானி திகழ்கின்றது. (வித்தியானந்தன், *1974*, p.349). இது விஞ் ஞானவர்த்தனியைப் போலில்லாமல் ஓரளவிற்குச் சமயம்சார்ந்த வெகுஜனப் பத்திரிகையாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டது. இப்பத்திரிகை ஓரிரு ஆண்டுகளுக்குள் தனது ஆயுளை முடித்துக் கொண்டதாகவே அறியப்படுகின்றது.

### இந்துசாதனம் – கி. பி. 1889

இலங்கைவாழ் இந்துக்களின் சமயச்சார்பான பத்திரிகைத்துறை வளர்ச்சியின் கொடு முடியாகத் திகழ்வது இந்துசாதனப் பத்திரிகையாகும். சைவபரிபாலன சபையினரின் வெளியீடாக *11.09.1889*ல் இப்பத்திரிகை வெளியானது. தமிழில் இந்துசாதனம் என்றும் ஆங்கிலத்தில் "Hindu Organ" எனவும் பெயரிடப்பட்டு "டெமிட்". பிரமாணம் கொண்ட தாளில் வெளிப்புறத்தில் ஆங்கிலமும் உட்புறத்தில் தமிழுமாக இருமொழி கலந்த ஏடாக ஆரம்பகாலங்களில் வாரத்தின் புதன்கிழமைதோறும் வெளிவந்தது (இந்துசாதனம் பொன் விழா மலர், *1939*, p.98)

ஆயினும் *1899*ம் ஆண்டு ஜுலை முதற்கொண்டு தமிழ் பிரசுரம் வேறாகவும் (இந்து சாதனம்) ஆங்கிலப் பிரசுரம் வேறாகவும் (Hindu Organ) வெளிவரத் தொடங்கின. இதன் ஆரம்பகாலங்களில் திருவனந்தபுரம் மகாராஜாவின் நீதிமன்றில் நீதியரசராகக் கடமையாற்றிய ஸ்ரீமான் தா. செல்லப்பா பிள்ளையவர்கள் இதன் ஆங்கில வெளியீட்டின் ஆசிரியராகவும், நாவலரின் மருகராகிய த. கைலாசப்பிள்ளையவர்கள் தமிழ் வெளியீட்டின் ஆசிரியராகவும் ஊதியமின்றிக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொ. கார்த்திகேசுபிள்ளை, ம. வே. திருஞானசம்பந்தன் நமசிவப்பிரகாசம் போன்ற புகழ்பூத்த சைவப்பேரறிஞர்கள் இந்துச்சாதனத்தின் ஆசிரியர்களாகக் கடமையாற்றியோர்களே என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. புத்தாயிரமாம் ஆண்டிலிருந்து இதன் ஆசிரியராக பேராசிரியர் குமாரவடிவேல் அவர்கள் சேவையாற்றி வந்துள்ளார். அவரைத் தொடர்ந்து தற்போது மயூரகிரிசர்மா சேவையாற்றிவருகிறார்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் இப்பத்திரிகை அரைநூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்து பண்பாட்டு மறுமலர்ச்சிக்காகப் போரிட்டது என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இவற்றை அரண்செய்யும் வகையில் இந்துசாதனத்தின் பரந்த விடயப்பரப்பிலிருந்து வகை மாதிரி எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டலாம். "தாழ்த்தப்பட்ட சாதியராம்" என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங்கமொன்று இவ்வாறு தொடர்கிறது.

"எந்த வருணத்து உதித்தோரும் கல்வியறிவு ஒழுக்கமுடையரேல் அவர் எல்லா வர்ணத்தினராலும் கைக்கொள்ளப்படுவர். இந்து மதக் கொள்கையின்படி ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவனுடைய ஒழுக்கமேயல்லாமற் சாதியன்று. நந்தனார்இ திருவள்ளுவர் முதலானோர் இதற்குத் திருட்டாந்தமாக விளங்குவர்" (இந்துசாதனம், *03.01.1903*, p.03.(ங))

வர்ணாச்சிரம தர்மத்தைக்காட்டி சமூக அடுக்கமைவை நியாயப்படுத்துவோர்க்கு உண்மையை விளக்க முற்படுவதாக மேற்படி ஆசிரியர் தலையங்கம் அமைகிறது. இந்து சாதனமானது ஆண், பெண் சமத்துவம் பற்றியும் பெண்கள் சமூகத்தின் முன்வந்து அறம் வளர்க்க வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தத் தவறவில்லை."மனித வர்க்கத்தின் வித வனிதையரிடத்தே" என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங்கமொன்றில் "ஆண் தகைமையோர்களும் அவர்க்கு நிகரன்றே" என்ற கந்தபுராணச் செய்யுள் அடியொன்று எடுத்துக் காட்டப்பட்டு அறம் வளர்க்கவல்ல சக்தி ஆண்களை விடவும்

பெண்களிடத்திலேயே அதிகம் உண்டு என வலியுறுத்தப்பட்டுள்ளது (இந்துசாதனம், *07.12.1892*, ப. *03*.(ங))

இந்துசாதனப் பத்திரிகையானது இந்து சமூகத்தில் சமயத்தின் பெயரால் புரையோடிப்போய்விட்ட குறைபாடுகளையும் கண்டிக்கத் தவறவில்லை. ஆலயத்தில் நடைபெறுகின்ற வாணவேடிக்கை, சின்னமேளம், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடுதல் போன்ற விடயங்கள் இந்த வகையில் கண்டனத்துக்குள்ளாகின. அதே சமயத்தில் இந்து சமூகத்தினரை மதமாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டோருக் கெதிராகக் கடுமையான விமர்சனங்களையும் இந்து சாதனம் வெளியிடத்தயங்கவில்லை. இந்த வகையில் "சைவ நிந்தனை பொறா மனமும்" என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கமொன்று பின்வருமாறு நீண்டு செல்கின்றது. "சைவாபிமானமில்லாத ஒரு சைவனைக் காட்டிலும் தன் சமயத்தில் அபிமானம் பெரிதுடைய அந்நிய மதத்தவன் உத்தமனாவான். ஏனென்றால் இவன் தன் சமயத்திற்குத் துரோகியாகின்றான். உத்தியோகத்திற்கும், அதிகாரத்திற்கும் முகமனுக்கும் அபேட்சை கொண்டு இருப்பதனாலேயே மற்றச் சமயவாதிகளும் இடையிடையே அதிகாரிகளும் நம் சமயத்தை நிந்திக்கத் தலைப்படுகின்றனர்". (இந்துசாதனம், *01.09.1927*, p.*03*(ங))

இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் பிரசங்கங்களினதும்இ புராணபடனம் செய்வோரினதும் பங்கு அக்காலத்தில் இன்றியமையாத இடத்தை வகித்ததென்று கூறலாம். ஏனெனில் சமூகத்தின் அனைத்து வகுப்பினரையும் ஈர்க்கவல்ல சாதனங்களாகக் கதாபிரசங்கமும், புராணபடனமும் திகழ்ந்திருக்கின்றன. எனவே இந்து சமூகத்தில் இவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் செய்திக் கட்டுரைகளை இந்து சாதனம் தாங்கி வந்திருக்கிறது. அந்த வகையில் "விடயப் பிரசங்கஞ் செய்வோர், கதாப்பிரசங்கம் செய்வோர, புராணபடனம் செய்வோர் எனப்படும் இந்த முத்திறத்தாரையும் அருகிவிடவொண்ணாது. இவர்களே சமயப் பண்பாட்டை வளர்ப்பவராவார்கள். ஆலயங்களிலும் உற்சவ காலங்களில் இவர்களைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தல் வேண்டும். இங்ஙனம் செய்தாற்றான் நமது சமயமும் பண்பாடும் விருத்தியடைந்து வரும். புலால் புசித்தல், மதுபானம் முதலாந் தீமைகள் குன்றும் (இந்துசாதனம்,*14.06.1900*, p.*04* (ச)) எனத் தொடர்கின்ற செய்திக் கட்டுரையொன்றைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும்.

இந்துப் பண்பாட்டின் முக்கிய அம்சமாகத் திகழ்வன திருக்கோயில்கள் எனலாம். இந்து மதத்திற்கு நெருக்கடிகள் ஏற்படுகின்ற காலகட்டங்களில் எல்லாம் திருக்கோயில்களை மையப்படுத்தி இந்துப் பண்பாடு நிமிர்வுற்றதை பல இந்திய, இலங்கை வரலாற்றுக் காலகட்டங்கள் எடுத்துரைக்கின்றன. எனவேதான் இந்துப் பண்பாட்டைக் கோயிற் பண்பாடாகவே குறிப்பிட்டுப் போனார்கள் மேலைத்தேச ஆய்வாளர் பலர்.

இலங்கையிலும் கோயிற் பண்பாடு முக்கிய இடத்தைப் பெற்று விளங்கிய ஒன்றாகும். திருக்கோயிற் பண்பாடு செம்மையாக அமையின் அது ஒட்டுமொத்த சமூகத்தையுமே செம்மையுடையதாக்கும் என்பதனை நன்கு உணர்ந்துகொண்ட இந்து சாதனம் இதனை வலியுறுத்தி அனேக ஆக்கங்களைக் காலத்துக்குக் காலம் பிரசுரித்து வந்துள்ளது.

இந்து ஒருவன் ஆலயம் சென்று வழிபடும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விதிமுறைகளையும் அவை செவ்வனவே பின்பற்றப்படாததைக் கண்டிக்கும் வகையிலும் "ஆலய வழிபாடு எவ்விதம் ஈனதசை அடைந்தது" எனத் தலைப்பிடப்பட்ட ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு அமைகிறது.

"ஆலய தரிசனஞ் செய்வோர், ஆசார சீலராய் பயபக்தி உடையோராய் விளங்கினர். அருச்சனைக்குரிய திரவியங்களேதுமில்லாது ஆலயம் செல்லார். முறை பிறழாது வணங்குவர். வெற்றிலை, பாக்கு வாயிலிடார். மௌட்டிகம் பேசார். கையிற்றடி ஏந்தார். வீண்வார்த்தை ஆடார்.

ஆலய சேவையில் அதிகாரியென்றும் தனவந்தனென்றும் பாகுபாடுகள் அக்காலத்தில்ஒருபோதுமில்லை..........." (இந்துசாதனம், 03.02.1897 p.04 (ச))

இந்துசமய பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கின் முக்கியமான இலக்குகளில் ஒன்று இந்து சமயநிலையிலிருந்து வழுவாத கல்வி முன்னேற்றமாகும். மேலைத் தேய பணபலத்துடனும் ஆளும் வர்க்கத்தின் ஆசியோடும் சமயப் பணிக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மிசனரிமாரால் உன்னத தரத்துடன் நடாத்தப்பட்டு வந்த கிறித்தவக்கல்லூரிகளுடன் போட்டியிடவல்ல சுதேசிய இந்துப் பாடசாலைகளை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று. இப்பகீரதப் பிரயத்தனத்தில் இந்துசாதனமும் உற்சாகத்துடன் பங்குகொண்டது. அதன்அனேக ஆசிரியர் தலையங்கங்கள் இதனை வலியுறுத்தத் தவறவில்லை.

"அரசினர் கலாசாலைகளோ மிசனரிப் பாடசாலைகளோ சுயமதப்பற்றை உள்ளத்தில் ஊன்றி விடக்கூடிய சக்தி வாய்ந்தன அல்ல. பச்சிளம் பாலகர்கள் முதலாக வயது வந்தவர்கள் ஈறாக எவர்களும் தத்தம் சமய உணர்ச்சியை ஊட்டு விக்கும் பாடசாலைகளில் கல்வி பயில வேண்டியது அவசியமாகிறது. இம்முயற்சிக்கு நிதி மிகுந்தோர் பொற்குவையும் வித்துவான் களின் நற்பணியும் அவசியமன்றோ" (இந்துசாதனம், 03.02.1890, p,04 (ச))

இந்து சாதனத்தின் குரலை அர்த்தப்படுத்தும் வகையில் இந்துக் கல்லூரிகளின் எழுச்சி அமைந்ததெனலாம். முதன் முதலாக 1890இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிறுவப்பட்டது. அது மிகக் குறுகிய காலகட்டத்திலேயே கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற கல்லூரியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இதனைத் தொடர்ந்து நாடெங்கும் அனேக இந்துக் கல்லூரிகள் தோற்றம் பெறத் தொடங்கின. நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைகளூடாகக் கண்ட கனவை இந்துக் கல்லூரிகள் நிறைவேற்றி வைத்தன என்றே கூறலாம்.

## நிறைவுரை:

இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சி என்பது ஆட்சியாளரையும் மிசனரிமாரையும் பொறுத்த வரையில் கிணறு வெட்டப் பூதங் கிளம்பியதைப் போல அவர்களே எதிர்பாராமல் அவர்களின் உதவியுடனே நடைபெற்ற ஒன்றாகும். அதுபோன்றே இந்துப் பத்திரிகை ஊடகத்தின் தோற்றுவாய்க்கும் அவர்களே இச்சையின்றி உடந்தையாக அமைந்தனர்.

மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் இலங்கையிற் தோன்றிய இந்துப் பத்திரிகைகளின் செல்நெறியானது பொதுவாக நாவலரது கருத்து நிலையில் கால் ஊன்றிய பாய்ச்சலாகவே அமைந்தது. அந்த வகையில் பிறமத கண்டனங்கள், சுயமத கண்டனத்துக் கெதிரான பதிலுரைகள், வலிமையான இந்துக் கல்விப் புலமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான அறைகூவல்கள், இந்து சமுகத்தில் புரையோடியிருந்த சில மூடநம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் விமர்சித்தல், பெண்கல்வி பற்றிய விழிப்புணர்வூட்டல், மது, மாமிச உணவு, உயிர்க்கொலை, விபச்சாரத்திற்கெதிரான கண்டனங்கள் எனப்பல தளங்களில் இவற்றின் பிரச்சாரம் நீட்சியுற்றது.

ஆயினும் இப்பத்திரிகைகள் மேட்டுக் குடியினரையும் படித்த நடுத்தர வர்க்கத்தினரையும் கடந்து விளிம்பு நிலை மக்களை நோக்கித் தமது சிந்தனைக் கரங்களை எந்தளவுக்கு விரித்துக் கொண்டன என்பது கேள்விக்குரியதே! ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முடுக்கிவிடப்பட்ட இந்துசமய மறுமலர்ச்சியின் உத்வேக பங்காளர்களாகத் திகழ்ந்தவர்கள் படித்த நடுத்தர வர்க்கத்தினர் என்ற வகையில் தமது இலக்கை அறிந்து பாய்ந்த பிரம்மாஸ்திரங்களாகவே இப்பத்திரிகைகளைக் கருதவேண்டும்.

## References

Engle Wood Cliffs. (1976). *History of Painting, Sculpture Architecture*, Voll – II. New York.

*Hindusathanam Pon Vizha Malar*. (1939). Yazpanam: Saivap Pirakasa Achuyanthirasalai.

*Morning Star*; 07.01.1941, Manipay.The American Mission Press.

*Saivauthayabanu*. (3 Maasi1982).

Sivagurunathan, I. (1993). *Ilangaiyil Tamil Puthina Pathirikaikalin Valarchi*. Chennai: Pari Nilayam.

Sivam, Koppay. (1984). *Ilangai Tamil Puthinap Pathirikkai Sanjikaikal Oru Kaiyeedu* (1841-1984). Kilinochi: Sarvasakthi Veliyidu.

Vidyanandan, Su, (Eds). (1974). *4-vathu Anaithulakath Tamilaraichi Mahanadu Malar*. (Vol 1). Kolumbu: Anaithulaga Tamilaraichi Mandra Ilangai Kilai.